செ.வெ.எண். 470

நாள்: 06.08.2019

<u>செய்தி குறிப்பு</u>

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் புதிதாகத் துவங்கப்பட்டுள்ள மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் 'A-28,டான்சி கட்டிடம் முதல் தளம்,திரு.வி.க தொழிற்பேட்டை,கிண்டி,சென்னை-32' என்ற முகவரியில் இயங்கிவருகிறது.

இவ்வலுவலகத்தில் காலியாக உள்ள இரண்டு தொழில்நெறி ஆலோசகர் (1 ஆண் மற்றும் 1 பெண்) பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன. இப்பணியிடத்திற்கான கல்வித்தகுதி உளவியலில் M.Sc/M.Phill/Ph.D முடித்திருக்கவேண்டும். தொழில்நெறி ஆலோசனை துறையில் குறைந்தது மூன்றாண்டுகள் அனுபவமும் இருத்தல் அவசியம். 30 முதல் 40 வயது உடையவராய் இருத்தல் வேண்டும். இப்பணியிடத்திற்கான மாத ஊதியம் ரூ.30,000/- (சேவைக்கட்டணம் உட்பட)ஆகும். மேற்காணும் தகுதிகளை உடையோர் மற்றும் இப்பணிக்கு விண்ணப்பிக்க விருப்பம் உடைய ஆண் மற்றும் பெண் ஆலோசகர்கள் தமது சுயவிவரக்குறிப்பினை statecareercentre@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 10/8/19க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. உரிய பரிசீலனைக்கு பிறகு தகுந்த தகுதியுடைய நபர்களுக்கு நேர்காணல் தொடர்பான தகவல் தெரிவிக்கப்படும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-09